**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண்.174/2019

நாள்: 22.10.2024

பெயர்: வேலாயுதம் (வா.சா.1) த/பெ: சாமிநாதன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...**

1) தாவா சொத்து பெரியநாயகி அம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்காக ஆவணங்கள் எதாவது உள்ளதா என்றால் கோவில் பெயரில் இல்லை. என் தாத்தா கோவிந்த படையாட்சி பெயரில் உள்ளது. பெரியநாயகி அம்மன் கோவில் இந்து அறநிலையதுறைக்கு கட்டுப்பட்டது அல்ல. பெரியநாயகி அம்மன் கோவில் பெயரில் 32 செண்ட் நிலம் உள்ளது. பட்டா எண்.469 கூட்டுப்பட்டாவில் சர்வே எண். 196/6ல் கட்டுப்பட்டது. தாவா சொத்து பட்டா வகையை சார்ந்தது. சர்வே எண்.196/6 என்பது UDRல் உட்பிரிவுகள் செய்யப்பட்டது. UDR ல் எத்தனை உட்பிரிவுகள் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு 5 நபர்கள் பெயரில் பட்டா உள்ளது. தாவா சொத்தில் 5 ஏர்ஸ் சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது. மேற்கண்ட பட்டாக்கள் அனைத்தும் UDRல் ஏற்பட்டது.

2) UDR ஏற்பட்டது 1982 முதல் 1986 வரை ஆகும். பெரியநாயகி அம்மன் கோவிலுக்கு நான் பூசாரி என்பதற்கு ஆதாரங்கள் எதாவது உள்ளதா என்றால் எதுவும் இல்லை. மேற்கண்ட கோவிலுக்கு சிவராத்திரி உற்சவம் வருடா வருடம் நடைபெறுகிறது என்றால் சரிதான். சிவராத்திரி உற்சவத்தை 4ம் பிரதிவாதி நடத்துகிறார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி தாவா கிராமத்தில் ஊராட்சி மன்ற தலைவராகவும், பத்திர எழுத்தராகவும் உள்ளார். 4ம் பிரதிவாதியின் சகோதரி அரியதங்கம் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதியின் தந்தையுடன் பிறந்த சகோதரி பெயர் சீனியம்மாள். 4ம் பிரதிவாதியின் தந்தை வழி பாட்டன் மருதமுத்து என்றால் சரிதான். மருதமுத்துவின் தம்பி பெயர் ஆறுமுகம். மேற்கண்ட ஆறுமுகத்தின் வாரிசுகள் தான் 6,7,8 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

3) என் மூத்த சகோதரர் பெயர் கந்தசாமி, இளைய சகோதரர் பெயர் கோவிந்த சாமி, சகோதரி பெயர் தமயந்தி. என் மூத்த சகோதரர் கந்தசாமி வழக்கிற்கு பின்னிட்டு இறந்துவிட்டார். என் தந்தை வழி பாட்டன் பெயர் கோவிந்த படையாட்சி. கோவிந்த படையாட்சியின் தந்தை பெயர் ஆறுமுகம். வா.சா.ஆ.1ன் அசல் ஆவணம் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட ஆவணம் என் முன்னோர்கள் பெயரில் ஏற்பட்டதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை என் முன்னோர்கள் அனுபவித்து வந்தார்கள் என்பதை காட்ட எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ரசீது தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டது இல்லை என்றால் சரியல்ல.

4) வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணமானது 1 முதல் 5 பிரதிவாதிகளின் பெயர்களில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 கூட்டுப்பட்டா என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரனம் 1.48 செண்ட் என்றால் சரிதான். அந்த 1.48 செண்டில் கட்டுப்பட்டது தான் மேல்புறம் 32 செண்ட் தாவா சொத்தாகும். தாவா சொத்திற்கு கீழ்புறம் பிரதிவாதிகள் சொத்து என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேல்புறம் ஏரி, தென்புறம் ஒழுங்கை, வடக்கே கந்தசாமி மகன் ராமச்சந்திரன் சொத்து. தாவா சொத்தையும், அதன் கீழ்புற சொத்தையும் பிரிக்க எவ்வித அத்தும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் R.S பதி மரங்கள் உள்ளது. தாவா சொத்தின் ஒரு செண்ட் மதிப்பு ரூ.1000/–, மரங்கள் மதிப்பு ரூ.2000/– ஆகும். பெரியநாயகி அம்மன் கோவில் கருவறையில் பெரியநாயகி அம்மன் மற்றும் வீரபத்திர சாமி சிலை இரண்டும் உள்ளது என்றால் சரிதான். அதில் வீரபத்திர சாமியின் சிலை வெண்கலத்தால் ஆனது.

5) 12.02.2018ல் வீரபத்திர சாமியின் வெண்கல சிலை திருட்டு போனது என்றால் எனக்கு தெரியாது. ரத்தினம் மகன் ரெங்கசாமி என்பவர் எங்கள் ஊர் நாட்டார் ஆவார். பெரியநாயகி அம்மன் கோவிலுக்கு கோவிந்த சாமி மகன் குருசாமி என்பவர் தான் பூசாரி என்றால் சரியல்ல. 13.02.2018ல் அவர் தான்

பூசாரி என்று கொடுக்கப்பட்ட புகாரின் பெயரில் முதல் தகவல் அறிக்கை பதிவாகியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பெரியநாயகி அம்மன் கோவிலுக்கு நான் பூசாரி இல்லை என்றாலும், தாவா சொத்து பெரியநாயகி அம்மன் கோவிலுக்கு சொந்தமானது இல்லை என்றாலும் சரியல்ல. பெரியநாயகி அம்மன் கோவிலுக்கு நான் தான் பூசாரி என்று பிரதிநிதித்துவ அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை நானோ அல்லது என்னுடைய முன்னோர்களோ ஒருபோதும் அனுபவம் செய்தததது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகள் அடங்கிய அவர்களின் குடும்ப பூர்வீக சொத்துக்கள் என்றால் சரியல்ல.

6) தாவா சொத்தின் அனுபவத்தை அனுசரித்து தாவா சொத்திற்கான பட்டா இப்பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பந்தப்பட்ட கோவிலுக்கும், எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும், பிரதிவாதிகள் பெயரில் உள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/– திரு.S.கணேஷ், M.Com, M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.